IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலப் பறவைகள்

முனைவர் கதி.முருகேசன் (கதிர் முருகு), உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
கணேசர் கலை அறிவியல் கல்லூரி
மேலைச்சிவபுரி - 622403

Dr.KT.Murugesan (Kathirmurugu)
Assistant professor, Department of Tamil
Ganesar College of Arts and Science
Melaisivapuri - 62403

## ஆய்வுச் சுருக்கம்

நெய்தல் நிலம் நெய்தல் பூவின் மிகுதியைக் கருத்தில் கொண்டு அப்பூவின் பெயரால் அமைந்த நிலம், கடற்கரை, உப்பங்கழி, கடற்கரைச் சோலை ஆகியவற்றை உள்ளடக்கியது நெய்தல் நிலச்சூழல். வளமான உயிரியல் சூழலைத் தன்னகத்தே கொண்டது. கடலில் உள்ள மிகுதியான உயிர்ச்சூழல் மக்களுக்கும் பறவைகளுக்கும் வாழ்வாதாரமாக அமைகிறது. கடற்கரைப் பகுதியில் செழித்து வளரும் புன்னை தாழை ஞாழல் முதலான தாவரங்களை வாழ்விடமாகக் கொண்டு அன்னம், அன்றில், கடல் காக்கை, சிறுவெண் காக்கை, குருகு, நாரை, கொக்கு, ஆந்தை முதலான பறவைகள் வாழ்கின்றன. ஒவ்வொரு பறவையும் தனக்கான தனித்த பண்புகளைக் கொண்டு விளங்குகிறது. பறவைகளின் வாழ்வியல் கடற்கரைச் சூழலை ஒட்டியே அமைகிறது. தங்களின் குண இயல்பிற்கு ஏற்ப அவை தனியாகவோ கூட்டமாகவோ வாழ்கின்றன. சங்க இலக்கியத்தில் இடம்பெறும் நெய்தல் திணைப் பாடல்கள் விரிவான அளவில் பறவைகள் குறித்த நுட்பமான செய்திகளைப் பதிவு செய்துள்ளன. நெய்தல் திணைப் பாடல்களின் மூலம் அறியலாகும் பறவைகள் குறித்த செய்திகள் பறவைகளின்

வாழ்வியலை அறிந்து கொள்ள உதவுகின்றன.

## குறிப்புச் சொற்கள்

நெய்தல் நிலம், நெய்தல் மலர், கடல், கடற்கரை, உப்பங்கழி, உவர் நிலம், கடற்காக்கை, நாரை, அன்றில், சிறு வெண் காக்கை, கொக்கு, மகன்றில்.

## ABSTRACT

The Neithal landscape includes coastal, backwater, and coastal oases. The land is named after the Neithal flower because of its abundance. It has a rich biological environment. Abundant ecosystems in the sea provide habitat for people and birds. Birds such as swans, sea ravens, little white crows, cormorants, storks, cranes, owls live in the coastal areas with plants such as punnai gnalal tunthai and others. Each bird has its own unique characteristics. Bird life is based on the coastal environment. They live alone or in groups according to their nature. The Neythal Thani hymns in the Sangha literature have elaborately recorded subtle messages about birds. The messages about the birds that are known through Neythal's songs help to know the life of the birds.

## KEY WORDS

Neidhal land, Neidhal flower, Sea, Seashore, backwater, back water lake, Kadal Kaakkai, Narai, Andril , Siru ven kakkai, Kokku, , Annam

## முன்னுரை

தமிழ் மொழியின் பழைய இலக்கியங்களான சங்க இலக்கியங்கள் உயர்திணை அஃறிணை வாழ்வியலை விரிவாகப் புரிந்துகொள்ள உதவுகின்றன. கடல் சார்ந்த சூழலில் காணப்படும் உப்பங்கழியிலும் பிற நீர்நிலைகளிலும் மிகுதியாக மலரும் நெய்தல் மலரின் பெயரால் குறியீட்டு நிலையில் நெய்தல் நிலத்தின் பெயர் அமைகிறது. கடலும் கடல் சார்ந்த நிலமான நெய்தல் மிகுதியான உயிரின, தாவரச் சூழலைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. கடலில் கிடைக்கும் மிகுதியான மீன்களைப் பயன்கொண்டு மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை அமைத்துக்கொண்டுள்ளனர். கடல் உப்பங்கழி ஆகியவற்றில் காணப்படும் உயிர்களை உணவாக உண்டு வாழும் பறவையினங்கள் கடற்கரைச் சூழலில் மிகுதியாகக் காணப்படுகின்றன. குறிப்பாக, கடற்கரைச் சூழலில் மீன்களை உண்டு வாழும் பறவைகளின் எண்ணிக்கை மிகுதியாகும். அன்றில், குருகு, கொக்கு, நாரை, மகன்றில், அன்னம், ஆந்தை முதலான பறவை இனங்கள் கடற்கரை சார்ந்து வாழ்கின்றன. அவை ஒவ்வொன்றும் கடலியல் சூழல் சார்ந்து தங்களுக்கெனப் பொதுவான மற்றும் சிறப்பான பண்புகளைப் பெற்று விளங்குகின்றன. நெய்தல் நிலப் பறவைகளைச் சங்க இலக்கியங்களில் காணப்படும் நெய்தல் திணைப் பாடல்களைச் சான்றாதாரங்களாகக் கொண்டு ஆராயும்போது பண்டைய புலவர்கள் இயற்கை குறித்தும் அஃறிணை வாழ்வியல் குறித்தும் எத்தகைய பட்டறிவைக் கொண்டிருந்தனர் என்பதை விரிவான நிலையில் புரிந்து கொள்ள இயலும். அவ்வகையில் இவ்வாய்வுக் கட்டுரை நெய்தல் நிலப் பறவைகள் குறித்து ஆராய்கிறது.

## அன்னம்

அன்னம் (Swan) என்பது அனாடிடே குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பறவை. இது நீர் நிலம் இரண்டிலும் வாழும் இயல்புடையது (www.wikipedia.Com) அன்னப்பறவை குறித்த குறிப்புகள் சங்க இலக்கியங்களிலும் பிற தமிழ் இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. ஆனால் அப்பறவை தற்போது காணக் கிடைக்கவில்லை. இலக்கியங்கள் கூறும் சான்றாதாரங்களைக் கொண்டு அன்னப்பறவை வாழ்த்திருக்கலாம் என்று கருத இடம் இருக்கிறது."உ.வே.சாமிநாதையர் குறுந்தொகை ஆராய்ச்சி உரையில் குறுகிய கால்களையும் வெண்மை நிறத்தையும் உடையது. கடற்கரை மணல் பகுதியில் தங்கியிருக்கும். மிகுதியான உயரத்தில் பறக்கும் இயல்புடையது" என்று குறிப்பிடுகிறார். (குறுந்தொகை ஆராய்ச்சியுரை, கேசரி அச்சுக்கூடம், ப.60) "அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட ஐங்குறுநூறு மூலமும் விளக்கவுரையும் என்னும் நூலில் ஔவை துரைசாமிப்பிள்ளை, அன்னப்பறவையின் கால் நீண்டு மயிர் அடர்ந்து நுனி குவிந்து காணப்படும் " என்று குறிப்பிடுகிறார். (ஐங்குறுநூறு மூலமும் விளக்கவுரையும், ப.312) இருவரின் கருத்துகளும் அன்னப்பறவையின் தோற்றம் குறித்து மாறுபாடான கருத்துகளைக் கொண்டிருப்பதால் அன்னப்பறவை குறித்து மேலும் ஆராய இடம் இருக்கிறது. இலக்கியச் சான்றுகள் உ.வே. சாமிநாதையர் கருத்துடன் இயைத்தனவாக உள்ளன. அன்னப்பறவை வெண்மை நிறமுடையது (சிறுபாண்.146) மென்மையான சிறகுகளையும் செம்மை நிறமான கால்களையும் கொண்டது (நற்.356; மதுரைக்.386) வலிமையான சிறகுகளைக் கொண்ட (ஐங். 106) இப் பறவையின் கால்கள் வளைந்து காணப்படும் (அகம். 234) கால்களில் விரல்களின் இடையே உள்ள அகன்ற தோல் நீர்நிலைகளில் நீந்த ஏற்றதாக விளங்கிய காரணத்தால் துதிக்கால் அன்னம் எனப்பட்டது (ஐங். 106:2-4) அன்னப் பறவையின் சிறகுகள் மென்மையாகக் காணப்படும் காரணத்தால் மெத்தைகளில் பொதிந்துவைக்கும் வழக்கம் இருந்ததை (நெடுநல்.132; கலி.146:4) என்னும் சான்றுகள் தெளிவு படுத்துகின்றன. உயரமாகவும் (குறுந். 205:1 - 5) விரைந்தும் (மதுரைக்.384 - 387) பறக்கும் இயல்புடையது. நெல்வயல் (நற். 73) குளம் (அகம்.334:10) கடற்கரை மணல் மேடு (குறுந்.300) ஆறுகள்(கலி. 69:6) உப்பங்கழி (அகம்.320) முதலான இடங்களில் கூட்டமாக வாழும் இயல்புடையது (குறுந். 205) காலை வேளையில் ஆண் அன்னமும் பெண் அன்னமும் மாறிமாறி ஒலி எழுப்பியதை மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது (675) உப்பங்கழியில் மீனைத் தேடித் தின்று அடும்புக் கொடி படர்ந்திருக்கும் மணல் மேட்டில் அமர்ந்து சிறகுகளை அலகினால் கோதி உலர்த்திய காட்சியை அகநானூறு குறிப்பிடுகிறது (320: 8-10) கடலில் சுறாமீன் வேட்டையாடும் மீனவர்கள் எறியுளி கொண்டு வேட்டையாடும்போது அவர்கள் உளி எறியும் ஒலிக்கு அச்சம் கொண்டு அன்னப்பறவைகள் பறந்து சென்றதாகக் குறுந்தொகை பதிவு செய்துள்ளது (304:1-6).

## அன்றில்

அன்றில் பறவை (Threskiornit hidae) என்ற அரிவாள் மூக்கன் குடும்பத்தைச் சார்ந்த ஒரு கரைப்பறவை (Shore or Wader) ஆகும் (www.wikipedia.com) அன்றில் பறவை ஐபிஸ் இனத்தில் பரவலாகக் காணப்படும் இனமாகும். இது ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவின் அட்லாண்டிக் பெருங்கடல் கரீபியன் பகுதிகளில் ஆங்காங்குக் காணப்படுகின்றன (மேலது.) இன்றைய கோடியக்கரை பண்டைக்காலத்தில் ஊணூர் என்று அழைக்கப்பட்டதாகவும் (உறுதிப்படுத்தப்படாத

செய்தி) இதன் கடற்கரைப் பகுதி மருங்கூர்ப் பட்டினம் என்று அழைக்கப்பட்டதாகவும் இங்கு மிகுதியான அன்றில் பறவைகள் வாழ்ந்ததாகவும் அறியமுடிகிறது (மேலது.) புங்குடுத் தீவு அன்றில் தீவு என அழைக்கப்பட்டதாக அறியமுடிகிறது (இதழ், இணைய இதழ், 27, ஜூலை, 2016) அன்றில் நெய்தல் நிலத்திற்குரிய பறவையாகும். இது கருநிறமுடையது. இதன் அலகு வளைந்திருக்கும். இதனது வளைந்த அலகிற்குப் புலர்வர்கள் இறால்மீனை உவமை கூறுவர். ஆண்பறவையினது உச்சிச்சூட்டானது நெருப்புப்போன்று சிவந்து காணப்பெறும். இதன் குரல் ஊதுகொம்பின் ஒலியை ஒத்திருக்கும். இது தடா, பனைமரங்களில் கூடு கட்டி வாழும். இது ஊர் அரவம் அடங்கிய பின்னர் நரலும். நெய்தல் திணை ஒழுக்கமாகிய இரங்கற்பகுதியில் இப்பறவையைப்பற்றிப் பெரிதும் புலவர்கள் பேசுகின்றனர். இதனது கண் பார்வை மாலையில் மங்கிவிடும் என்றும், பெடை மாலை நேரம் வந்துவிட்டது என்பதைத் தனது சேவலுக்கு அறிவித்து அதைத் தன் கூட்டிற்கு அழைக்கும் தன்மையது என்றும் புலவர்கள் கூறியுள்ளனர் (பி.எல். சாமி, சங்க இலக்கியத்தில் பறவைகள் விலங்குகள், பக்.46,47) அன்றில் பறவை இனத்தில் ஆண் பறவை சிவந்த தலையும் (குறுந்.160:1-4) இறால் மீன் போன்ற வளைந்த வாயினையும் உடையது (குறுந்.219;220; நற். 124:1) பனைமரம் தடா மரம் ஆகியவற்றில் கூடுகட்டி வாழும் இயல்புடையது (அகம்.260:6-7; குறுந்.301:1-4) ஆணும் பெண்ணும் ஒன்றையொன்று பிரியாமல் வாழும் இயல்புடையது (நற். 14:1) தன் துணையுடன் சேர்ந்து வாழும் இயல்புடையது. துணையில் ஒன்று பிரிந்தாலும் குரல் எழுப்பும். இதனை அகவல் என்றும் ஆணும் பெண்ணும் சேர்த்திருக்கும்போது எழுப்பும் குரலை உளறல் என்றும் பெண் கருவுற்றிருக்கும்போது எழுப்பும் குரலை நரலல் என்றும் சங்கத்தமிழ் பாடுபடுத்தி வழங்குகிறது (www.wikipedia.com) இதனை (குறுந்.360; 301:4) என்னும் பாடற் சான்றுகளான் அறியலாம்.

## நாரை

சங்க இலக்கியப் பாக்களில் பரவலாகப் பயின்று வரும் பறவை இனம். நீர்வளம் மிக்க பகுதிகளில் ஆங்காங்கே ஏரி, குளம், சதுப்பு நிலம், கழிமுகம் ஆகியவற்றைச் சார்ந்து தனித்துத் திரிவது. காலை மாலை நேரங்களில் நீர்நிலைகளின் ஆழமற்ற மேல் ஓரங்களில் ஆடாது அசையாது கழுத்தை உள்ளே இழுத்து வைத்தபடி நின்று உரிய மீன் நெருங்கும்போது கழுத்தை நீட்டிக் கவ்வும் பின் தலையைத் தூக்கி மீனின் தலை முதலில் உள்ளே செல்லும்படி விழுங்கும். மனிதர் நெருங்கினால் க்வார்க் எனக் குரல் கொடுத்தபடி சிரமத்துடன் எழுந்து பறக்கும். மரங்களிலும் சதுப்புக் காடுகளிலும் இரவைக் கழிக்கும். மீன், தவளை, நத்தை ஆகியன முக்கிய உணவு. அலகை நீரில் செலுத்திப் பின் அண்ணாந்து தண்ணீர் பருகும் (க.ரத்னம், தமிழ்நாட்டுப் பறவைகள், ப.5) என்று க.ரத்னம் நாரையின் இயல்புகளைப் பதிவு செய்கிறார். தி.முத்துக் கண்ணப்பன், வெண்மையான சிறகினையும் சிறிது பசுமை நிறமான காலையும் செம்மை நிறமான வாயையும் உடையது. இதன் இறகின் இடையேயுள்ள தூவி மங்கிய செந்நிறமாக இருக்கும் (தி.முத்துக் கண்ணப்பன், முற்குறித்த நூல், பக்.88-89) என்று குறிப்பிடுகிறார். கலைக் களஞ்சியம் பல வகைப் பறவைகளுக்கும் நாரை என்னும் பெயர் வழங்கப்படுவதாகக் குறிப்பிடுகிறது (கலைக்களஞ்சியம், தொகுதி - 6, ப. 419) நாரையின் இயல்பை அபிதான சிந்தாமணி, நாரை இனத்தில் பல வேறுபாடுகள் உண்டு. கழுத்தும் மூக்கும் காலும் மிக நீளம். உடல் சற்றுப் படுத்தது. காலும் மூக்கும் மஞ்சள் கலந்த செந்நிறம். உடம்பு வெண்மை முதலிய பல நிறம் கொண்டது (அ சிங்காரவேலு முதலியர், அபிதான சித்தாமணி, ப.971) என்று குறிப்பிடுகிறார். நாரை முள்முருக்க இதழ் போன்ற மெல்லிய இறகையும் செம்மையான அலகையும் (குறுந்.

103:3)செம்மையான வரிகளை யும் (புறம். 351:9; பதிற்.23:21) நீண்டு (நற் 9:4) வளைந்த கால்களையும் உடையது. (பதிற்.23:21; 29:4; 22:12; 51:4; குறுந்.349:2) புன்னை, பனை, மருதம், முதலான மரங்களிலும் வைக்கோல் போரிலும் தங்கும் (பொருந.204; ஐங். 114:3 குறுந். 70:1; ஐங். 9:4) கயல் மீன் (புறம் 24:20; 354:5) வாளை (அகம். 360:16) ஆரல் (குறுந்.114:5) அயிரை (குறுந். 166:2) முதலான மீன்களையும் கரும்புப் பூ (புறம்.384:2) நெய்தல் பூ நெல் கதிர் (குறுந். 296:2) முதலானவற்றையும் உணவாகக் கொள்ளும். ஆணும் பெண்ணும் இரை தேடிக் கூட்டில் உள்ள பார்ப்புக்கு (பறவையின் இளமைப் பெயர்) ஊட்டும் (நற். 91:1-7) உப்பங்கழியில் இரை தேடுவதனால் உதிர்ந்த சிறகுகள் கழி நீரில் மிதக்கும் (ஐங். 156: 1-4) நாரையின் ஒலி ஊது கொம்பின் ஒலியை ஒத்து விளங்கும் (அகம்.112 : 16).

## சிறு வெண் காக்கை

கடற்கரையிலும் நெய்தல் நிலக் கழிப்பகுதியிலும் காணப்படும் ஒரு வகைக் காக்கை. கடற்கரையில் வாழும் பழங்குடி மக்கள் இதனைக் கடற் காக்கை என்று கூறுகின்றனர். இதன் கழுத்தின் கீழ்ப்புறம் மட்டும் சிறிது வெளுத்தும் ஏனைய உடல் முழுவதும் மங்கிய கருமையோடு இருப்பதால் இது சிறு வெண் காக்கை எனப்படுகிறது. இதனுடைய வாயின் உட்பகுதி செந்நிறமாக இருக்கும். நீர்நிலைகளில் மீன்பிடித்து உண்டு கடற்கரையில் உள்ள மரங்களில் கூடு கட்டி வாழும். இதனை நீர்க் காக்கை என்றும் கூறுவர். இச்சிறுவெண் காக்கைகள் நெய்தல் நிலத்து மரங்களாகிய புன்னை தாழை புலி நகக் கொன்றை முதலியவற்றில் தங்கியுறையும் (தி.முத்துக் கண்ணப்பன், மு.கு.நூ, ப.78) இவை ( சிறு வெண் காக்கை) தண்ணீரில் இருக்குங்கால் தலையும் வாலின் ஒரு சிறு பகுதியும் வெளியில் தோன்ற மூழ்கி இருப்பது இயல்பு. நீருக்குள் மூழ்கி நெடிது இருந்து அங்கே வாழும் மீன்களைப் பிடிப்பதில் இவை சீர்த்த குறி உடைய வாகும். நீருக்குள் மூழ்கிப் பிடித்த மீனை நிலக் காக்கை போலத் தலையை மேலே நிமிர்த்தி அசைத்து அசைத்து விழுங்கும் என்று ஔவை சு.துரைசாமிப் பிள்ளை குறிப்பிடுகிறார் (ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, ஐங்குறுநூறு மூலமும் உரையும், முதல் தொகுதி- நெய்தல், ப. 398) சிறுவெண் காக்கையின் வாய் செம்மை நிறமானது (குறுந்.334:1) கருமை நிறமான முதுகை உடையது (நற்.231: 1-5) முதுகு நனையுமாறு நீரைக் குடைந்து இரை தேடும் இயல்புடையது (மேலது.) காலை வேளையில் இறால் மீன்களைத் தின்னும் (நற்.358:1) காலையில் நகரில் பெண்கள் வைக்கும் பலி உணவைத் தின்று மாலையில் கடற் கரையில் குவிந்து கிடக்கும் இறால் மீன்களை உணவாகக் கொண்டு பாய்மரத்தில் ஓய்வெடுக்கும் (நற்.258:3-9 ஓய்வெடுக்கும்போது கொட்டாவி விடும் இயல்புடையது எனது நற்றிணை குறிப்பிடுகிறது. (345:1-5) உப்பங்கழியில் உள்ள பசிய இலைகளை விலக்கித் தனக்கான உணவைத் தேடும் (குறுந். 246:1-3) அயிரை முதலாகப் பல மீன்களையும் தின்னும் (ஐங். 164:1-3) பயன்படுத்தப்படாத தோணிகளில் கூடு கட்டி முட்டையிடும் (ஐங். 168:1-3) கடற்கரைச் சோலையில் தங்கும் (குறுந்.313:1-3).

## குருகு

நெய்தல் நிலத்துக்குரிய பறவைகளில் குருகும் ஒன்று. இதன் கால்கள் கரியவை உடல் வெண்மையானது. பனை மரத்தின் மடலில் கூடுகட்டி வாழ்ந்து கடலிலும்

கழியிலும் மீன் யாமை முதலவற்றைப் பிடித்து உண்டு வாழ்வது. இதன் உடலுக்குச் சங்கு, வெண் கூதாளம் பூ, வெண் தாழம்பூ முதலியவையும் காலுக்குத் தினையரி தாளும் உவமையாகக் கூறப்படுகின்றன. (தி.முத்துக் கண்ணப்பன், மு.கு.நூ, ப.83) குருகு வெண்மை நிறமாக இருப்பதால் வெள்ளாங்குருகு என்றும் சிறியதாய் இருப்பதால் சிறு வெள்ளாங்குருகு என்றும் அழைக்கப்படுகிறது (கலி, நெய்தல் விளக்கம், ப.764) உள்ளாங்குருகு எனப் பொதுமக்கள் கூறும் பறவையே இவ்வெண்குருகு என்று ஔவை சு. துரைசாமிப்பிள்ளை குறிப்பிடுகிறார். உள்ளான் குருகு எனக் கூறப்படும் பறவையைப் பொதுமக்கள் வாலாட்டிக் குருவி என்றும் கூறுகிறார்கள். நிலத்தில் சஞ்சரிக்கும்போது இக்குருகு தன் வாலை மேலும் கீழுமாக அசைத்துக்கொண்டே இருப்பதனால் இங்ஙனம் அழைக்கப்படுகிறது (ஐங்குறுநூறு மூலமும் விளக்கவுரையும், முதல் தொகுதி, ப.377) குருகு மெல்லிய சிறகுடன் (அகம். 40:3,4) பசுமையான கால்களைக் கொண்டு விளங்கியது (அகம்.273: 1-3; குறுந். 25) பனைமரத்தில் கூடு கட்டி வாழும். பகலில் இரை தேடி மாலை வேளையில் கூட்டில் சென்று தங்கும் (நற். 123: 1-4) காட்டாறு பொய்கை முதலான இடங்களில் இரை தேடும் (குறுந். 113:1-3) உயரமாகப் பறக்கும் இயல்புடையது (குறுந்.260:1-4) உமணர்கள் விட்டுச் சென்ற பழுதடைந்த வண்டிகளில் கூடு கட்டி முட்டையிடும் (நற். 118:3-5) புன்னை (நற். 67:3-5) தாழை (நற். 131:4 -6) மரங்களில் தங்கியிருக்கும். உப்பங்கழியைத் துலாவி மீன் கவர்ந்து தின்னும் (நற்.211: 1 - 8) கழியில் விழும் பனம்பழத்தின் ஒலிக்கு அச்சம் கொண்டு பறக்கும் (நற். 372: 1-5) சூல் கொண்ட குருகு அலையின் ஒலிக்கு அச்சம் கொள்ளும் (நற்.31:10, 11) பெண்கள் உலக்கை குற்றும் ஒலிக்கு அச்சம் கொண்டு பறக்கும் (அகம்.141:17-21) குருகுகளுக்கு அச்சம் கொண்டு நண்டுகள் இடம் பெயர்ந்து செல்வதை அகநானூறு எடுத்துக் காட்டியுள்ளது (அகம்.176:8-12) கடற்கரைச் சோலையில் மிகுதியான மீன்களைத் தின்னு கூட்டமாகக் குருகுகள் அமர்ந்த காரணத்தால் தாழைக் கிளை சுமை தாங்கமல் முறியும் (நற். 131: 6-4) மிகுதியான பனிக்காலத்தில் குளிர் தாங்காமல் துன்புற்றுக் குருகுகள் ஒலிப்பதையும் (ஐங்.457:1-2) இளம் பார்ப்புகள் ஒலி எழுப்புவதையும் (மேலது. 86:1-2) இலக்கியங்களில் காண முடிகிறது.

## கொக்கு

வெண் கொக்கு (intermediate egret, median egret, smaller egret, yellow-billed egret ) என்பது ஒரு நடுத்தர அளவுள்ள கொக்கு ஆகும். இப்பறவைகள் கிழக்கு ஆப்ரிக்கா, இந்தியத் துணைக் கண்டம், தென்கிழக்கு ஆசியா, ஆஸ்திரேலியா போன்ற இடங்களில் காணப்படுகிறது (www.wikipedia. com) கொக்கின் சிறகுகள் வெண்மை நிறம் உடையவை (புறம். 277:12) முதுகு மங்கிய சாம்பல் நிறமுடையது. கால்கள் பசிய நிறமுடையவை (புறம்.342; 7 - 10; குறுந். 122:1,2) கொக்கின் நகம் நெல் போன்று காணப்படுவதாக இலக்கியச் சான்றுகள் குறிப்பிடுகின்றன. (புறம். 395; நற்.258:6) கொக்கு நாரையுடன் சேர்ந்து மீன்களை உண்ட காட்சியை நெடுநல்வாடை குறிப்பிடுகிறது. (நெடுநல். 15 - 19) கொக்குகள் வரிசையாகப் பறந்து செல்லும் (அகம்.120:1-3) பனை மரத்தில் கூடு கட்டி

வாழும் (அகம். 290 : 1 - 7).

## வௌவால்

வௌவால் எனும் பறவை மரங்களிலும் பாழடைந்த இடங்களிலும் தலைகீழாகத் தொங்கும் தன்மையது. கரிய நிறமுடைய இதன் சிறகு வலிமையும் மென்மையும் வளைவும் கொண்டது. இதன் நகங்கள் மிகக் கூர்மை வாய்ந்தவை. இதனை வாவல் எனவும் கூறுவர். இரவில் இப்பறவை மெல்லப் பறந்துசென்று பழ மரங்களை அடைந்து நெல்லிக்கனி, மாம்பழம், பலாப்பழம் முதலியவற்றை உண்டு திரும்பும் (பி.எல்.சாமி, இலக்கியத்தில் விலங்குகளும் பறவைகளும், ப.59) மாலை வேளையில் இருள் சூழ்ந்ததும் தன் இருப்பிடத்தை விட்டுப் பறந்து சென்று கனிகளைத் தேடும் (நற்.218:1-3) முன் போன்ற மெல்லிய பற்களைக் கொண்டு விளங்கும் வௌவால் மரக் கிளையைப் பற்றித் தொங்கும் இயல்புடையது (நற். 87: 1-4).

## ஆந்தை

இரவில் உலவும் பறவைகளுள் ஒன்று. ஆந்தை ஸ்ட்றைஜிபோர்மெஸ் வரிசையைச் சேர்ந்த, தனித்த, இரவில் திரியும் இருநூறு வகைப் பறவைகளில் ஒன்றைக் குறிக்கும். ஆந்தைகள் பெரும்பாலும் சிறிய பாலூட்டிகள், பூச்சிகள், மற்றும் ஏனைய பறவைகளை வேட்டையாடும். ஆந்தைகள் முன்நோக்கும் பெரிய கண்களையும், காதுகளையும், சொண்டையும், மற்றும் facial disk என அழைக்கப்படும், தெளிவாகத் தெரியும், கண்களைச் சுற்றி வட்டமாக அமைந்த இறகுகளையும் கொண்டுள்ளது (www.wikipedia.com) ஆந்தைகள் நெய்தல் நிலத்தில் அருகிக் காணப்படுகின்றன. நெய்தல் நிலத்தில் கடற்கரைச் சோலையில் உள்ள வேப்பமரத்தில் இருந்து இரவுப் பொழுதில் ஆந்தைகள் இறைந்ததையும் (நற்.218:6-9) மணல் நிறைந்த பழைய ஊரில் உள்ள நீண்ட தெருவில் மக்கள் நடமாட்டம் இல்லாத நான்கு தெருக்கள் கூடும் இடங்களில் இரவுப் பொழுதில் அச்சம் தரத்தக்க வகையில் ஆந்தைகள் குழறியதையும் (நற்.319:3-5) இலக்கியச் சான்றுகள் குறிப்பிடுகின்றன.

## நெய்தல் நிலமும் பறவைகளும்

நெய்தல் நிலம் பிற நிலங்களில் இருந்து வேறுபட்டதாகும். கடலும் கடல் சார்ந்த சூழலைக் கொண்டு விளங்கும் நெய்தல் நிலம் பல்வேறு பறவைகளின் வாழ்வக்குக் களம் அமைத்துக் கொடுத்திருப்பதை இலக்கியச் சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன. நெய்தல் திணைப் பாடல்களைப் பாடிய புலவர்கள் நேரடியாகப் பறவைகளின் வாழ்வியலை உய்த்துணர்ந்து எடுத்துக்காட்டியுள்ள செய்திகள் பறவைகள் தாவரங்கள் குறித்த விரிவான செய்திகளை அறிந்து கொள்வதற்கு உதவுகின்றன. குறிப்பாக, ஒவ்வொரு பறவையின் வாழ்வியலை உற்று நோக்கி அவற்றின் தோற்றம், நிறம், செயல்பாடுகள், உணவு தேடும் முறை இனப்பெருக்கச் செயல்பாடுகள் முதலியவற்றை ஆழமான நோக்குடன் புலவர்கள் பாடல்களில் பதிவு செய்திருக்கின்றனர். அக வாழ்க்கை, புற வாழ்க்கை என்னும் இரண்டையும் எடுத்துக்காட்டுவதற்காக நெய்தல் நிலப் பின்னணியைத் துணையாக கொண்ட புலவர்கள் அகச்சிந்தனைகள் மட்டுமல்லாமல் தாம் உணர்ந்த இயற்கைக் கூறுகளையும் இலக்கியங்களில் பதிவு செய்துள்ளனர். பறவைகள் குறித்து ஆராய்ச்சி செய்யும் இன்றைய ஆய்வாளர்களுக்கு வழிகாட்டும் நோக்கிலும் இலக்கிய ஆய்வு மேற்கொள்ளும் இளம் ஆய்வாளர்களுக்குப் பல்வேறு குறிப்புகளை விரிவான நிலையில் எடுத்துக்காட்டும் வகையிலும் செய்திகள்

பாடல்களில் பதிவு பெற்றுள்ளன. குறிப்பாகப் பறவைகளின் அன்றாட வாழ்வியலை உற்று நோக்கிப் புலவர்கள் எடுத்துக்காட்டியுள்ள சிந்தனைகள் வியக்கத்தக்கனவாக உள்ளன. இதற்குக் கடற்கரை சார்ந்து வாழும் பறவைகள் கைவிடப்பட்ட தோணிகளிலும் உமணர்கள் கைவிட்டுச் சென்ற வண்டிகளிலும் முட்டையிடுவதையும் உணவு தேடும் முறைகளையும் குறிப்பிடலாம். இலக்கியங்களில் பதிவு பெற்றுள்ள நெய்தல் நிலப் பறவைகள் குறித்த சிந்தனைகள் பறவைகள் குறித்த அறிவியலாக அமைந்து நுட்பமான அறிவை வழங்குவனவாக விளங்குகின்றன.

## முடிவுரை

நெய்தல் நிலம் கடலும் கடல் சார்ந்த பகுதியையும் தனக்குரிய இடமாகக் கொண்டது. கடல், கடற்கரை, உப்பங்கழி, கடற்கரைச் சோலை ஆகியவற்றை உள்ளடக்கியது. நெய்தல் நிலம். கடல் மற்றும் உப்பங்கழியில் மிகுதியாக உள்ள மீன் வளத்தை உணவாகக் கொள்ளும் பொருட்டுப் பல்வகைப் பறவைகளும் நெய்தல் நிலத்தில் உள்ள மரங்களில் கூடமைத்து வாழ்கின்றன. அப் பறவைகளின் வாழ்வு நெய்தல் நிலச் சூழலைக் கட்டிக் காப்பதில் முக்கியப் பங்கு வகித்திருக்கிறது. ஒவ்வொரு பறவையும் உடல் அமைப்பாலும் நிறத்தாலும் வாழ்வு முறைமையாலும் வேறுபட்டவை. புலவர்கள் பறவைகளின் வாழ்வியலை நுட்பமாக உணர்ந்து அவற்றின் இயல்புகளைப் பாடல்களில் விளக்கிக் கூறியுள்ளனர். நெய்தல் திணைப் பாடல்களில் வெளிப்பட்டிருக்கும் பறவைகள் குறித்த சிந்தனைகள் இயற்கை அறிவியலாக அமைந்து பண்டைய புலவர்கள் எவ்வாறு இயற்கை ஆர்வலர்களாக, இயற்கைப் பொருள்களில் புரிந்துணர்வு உடையவர்களாக விளங்கியிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள உதவுகின்றன.

## துணை நூல்கள்


அகநானூறு மூலமும் உரையும், சென்னை: என்.சி.பி.எச்., 2004

இதழ், இணைய இதழ், 27 ஜூலை, 2016

ஐங்குறுநூறு மூலமும் உரையும், சென்னை: என் சி.பி.எச்., 2004

கதிர்முருகு, பத்துப்பாட்டு மூலமும் உரையும், சென்னை: சாரதா பதிப்பகம், 2009

கலித்தொகை மூலமும் உரையும்,சென்னை, என் சி. பி.எச், 2004

கலைக்களஞ்சியம், தொகுதி - 6, சென்னை: தமிழ் வளர்ச்சிக் கழகம், 1959

குறுந்தொகை மூலமும் உரையும், சென்னை: என் சி. பி.எச். 2004

சாமி பி.எல், சங்க இலக்கியத்தில் பறவைகள் விலங்குகள், சென்னை: ஔவை நூலகம், 1959

சாமிநாதையர் உ.வே. ஆராய்ச்சியுரை, குறுந்தொகை, சென்னை: கேஸரி அச்சுக்கூடம், 1937

சிங்காரவேலு முதலியார் அ, அபிதான சிந்தாமணி, சென்னை: சாரதா பதிப்பகம், 2007

சோமசுந்தரனார் பொ.வே, கலித்தொகை விளக்கவுரை, சென்னை: கழக வெளியீடு,

1975

நற்றிணை மூலமும் உரையும், சென்னை, என் சி. பி.எச், 2004

நச்சினார்க்கினியர், கலித்தொகை - நெய்தல்கலி, இவை. அனத்தராமையர் ஆராய்ச்சிக் குறிப்புரை, 1931

பதிற்றுப்பத்து மூலமும் உரையும், சென்னை, என் சி. பி.எச், 2004

புறநானூறு மூலமும் உரையும், சென்னை, என் சி. பி.எச், 2004

முத்துக் கண்ணப்பன் தி , சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம், சென்னை: அதிபத்தர் பதிப்பகம், 1978

ரத்னம், க, தமிழ்நாட்டுப் பறவைகள், சிதம்பரம் : மெய்யப்பன் தமிழாய்வகம், 2003

இணையம்

www. Wikipedia.com - அன்னம்

www.wikipedia.com - அன்றில்

www.wikipedia.com - கொக்கு